
REGISTRAR OF ...

உ

ஓம் குஹாயநம:

# திருப்புகழமிர்தம்

(மாத வெளியீடு)



திருப்புகழ் தொண்டன்

கிருபானந்தவாரி

...புகழமிர்தம் காரியாலயம்,

காங்கேயநல்லூர்.

அருணகிரி

...DARAN'S ENGRAVERS MADRAS

ஆ
இ2ணை11, N37ஈ.
N44. 8.10
189499.

வருட சந்தா ரூ. 2-0-0.

## பொருளடக்கம்.

திருப்புகழ்
ஆதிமகமாயி 219
கந்தரலங்காரம்
பொருபிடியுங்களி 224
கந்தரநுபூதி 199—206
கந்தர் திருவிளையாடல் 228
திருக்குறள் 230
கற்பு 233

## திருப்புகழமிர்தம் ஆண்டு மலர்கள்.

| | |
|---|---|
| ஈஸ்வர வருஷ மலர் | ரூ. 2 - 0 - 0 |
| பிரமாதி வருஷ மலர் | ரூ. 2 - 0 - 0 |
| விக்ரம வருஷ மலர் | ரூ. 2 - 0 - 0 |
| விஷு வருஷ மலர் | ரூ. 2 - 0 - 0 |

பிரதி ஒன்றுக்கு தபாற்கூலி (ரிஜிஸ்ட்ரேஷன் செலவு உள்பட
ரூ 0 - 7 - 0.

தாது, வெகுதான்ய, சித்திரபாநு ஆண்டு மலர்கள் கிடைக்காது.

### தேவார அருள்முறைத்திரட்டு கைவசம் கிடையாது.

ஆறுபடைவீட்டுப்படம் கைவசம் கிடையாது.
பதில் விரும்புவோர் ரிப்ளைகார்டு அல்லது ஸ்டாம்பு அனுப்பினாலல்லது பதில் தெரிவிக்க இயலாது.

மானேஜர்,
**திருப்புகழமிர்தம் காரியாலயம்,**
காங்கேயநல்லூர் *P. O. (Via)* காட்பாடி. *N. A.*

## கும்பாபிஷேகம்.

திருநெல்வேலி சுவாமி நெல்லையப்பர் ஸ்ரீ காந்திம[தி]யம்பாள் தேவஸ்தானம் அஷ்டபந்தன கும்பாபிஷேக[ம்] நிகழும் சுபாநு ஆண்டு தை மீ 25உ (7-2-44) திங்க[ட்]கிழமையன்று காலை நடைபெறும்.

உ

ஓம் குஹாய நம:

# திருப்புகழமிர்தம்

(All Rights Reserved)

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"


| | | |
|---|---|---|
| மலர் 8. Vol 8 | சுபாநு ஞூ தை மீ 1௳<br>ஜனவரி 1944 | இதழ். 10. No 10. |


## திருப்புகழ்

### ஊதிமலை.

ஆதிமக மாயியம்பை தேவிசிவ ஞர்மகிழ்ந்த
ஆவுடைய மாதுதந்த குமரேசா

ஆதரவ தாய்வருந்தி யாதியரு ணேசரேன்று
ஆஞுழனை யேவணங்க அருள்வாயே

பூதமது வானவைந்து பேதமிட வேயலைந்து
பூரணசி வாகமங்க ளறியாதே

பூணுமுலை மாதர்தங்கள் ஆசைவகை யேநினைந்து
போகமுற வேவிரும்பு மடியேனை

நீதயவ தாயிரங்கி நேசவரு ளேபுரிந்து
நீதிநெறி யேவிளங்க வுபதேச

நேர்மைசிவ ஞர்திகழ்ந்த காதிலுரை வேதமந்த்ர
நீலமயி லேறிவந்த வடிவேலா

ஓதுமறை யாகமஞ்சொல் யோகமது வேபுரிந்து
ஊழியுணர் வார்கள்தங்கள் வினைதீர

ஊனுமுயி ராய்வளர்ந்து ஓசையுடன் வாழ்வுதந்த
ஊதிமலை மீதுகந்த பெருமாளே.

பதவுரை.

[illegible]கமாயி - முதன்மைபெற்ற பெரிய மாயியாக விளங்குபவரும், அம்பை - அம்பிகையும், தேவி - ஒளிபெற்றவரும், சிவனார் மகிழ்ந்த ஆவுடைய மாது - சிவபெருமான் மகிழ்கின்ற ஆவுடையாள் என்னும் சிறப்பை யுடையவருமாகிய உமாதேவியார், தந்த - பெற்றருளிய, குமர ஈசா - திருக்குமாரராகிய தலைவரே! பூதம் அது ஆன ஐந்து பேதம் இடவே - பூதம் என்ற மண் நீர் தீ காற்று வான் என்ற ஐந்துவகையும் பேதமுற்று உடம்பாகிவர, அலைந்து - இவ்வுடம்பு கொண்டு அவமே யலைந்து, பூரண சிவ ஆகமங்கள் அறியாது - நிறைவுடைய சிவாகமங்களை அறிந்து கொள்ளாமல், பூணும் முலை மாதர் தங்கள் ஆசை வகையே நினைந்து - ஆபரணங்களை யணியுந் தனங்களையுடைய பெண்களுடைய ஆசையையே நினைந்து, போகம் உறவே விரும்பும் அடியேனை - அவர்களுடன் போகத்தை நுகர்தற்கே விரும்புகின்ற அடியேனை, நீ தயவதாய் இரங்கி - தேவரீர் மிக்க கருணையுடன் இரக்கங்கொண்டு, நேச அருளே புரிந்து - நேசத்துடன் திருவருள் செய்து, நீறு நெறியே விளங்க - சைவநீறும் சன்மார்க்க வழியும் நன்கு விளங்குமாறு, உபதேச நேர்மை - உபதேசம் செய்த தன்மையானது, சிவனார் திகழ்ந்த காதில்உரை வேதமந்த்ரம் - சிவபெருமானுடைய திகழ்கின்ற திருச்செவியில் உரைத்த வேதமுதலாகிய மந்த்ரமேயாம்; நீலமயில் ஏறிவந்த (அங்ஙனம் அடியேனுக்கு உபதேசிக்கும் பொருட்டு) நீலமயில்மேல் ஆரோகணித்து வந்தருளிய, வடிவேலா - கூர்மைபொருந்திய வேலாயுதத்தை யுடையவரே! ஓதும் மறை ஆகமம் சொல் - ஓதப்பெறுகின்ற வேதம் ஆகமம் என்ற பெருநூல்களால் பேசப் பெறுகின்ற, யோகம் அதுவே புரிந்து - சிவயோகத்தையே செய்து, ஊழி உணர்வார்கள் தங்கள் - ஊழிகாலத்தையும் உணர்கின்ற அழிவற்ற ஆன்றோர்களுடைய, வினை தீர - வினைகள் தீருமாறு, ஊனும் உயிராய் வளர்ந்து-அவர்களுடைய ஊனாகியும் உயிராகியும் கலந்து வளர்ந்து, ஓசையுடன் வாழ்வுதந்த - பிரமநாதத்துடன் சிவஞானாநுபவப் பெருவாழ்வைத் தந்தருள்கின்ற, ஊதிமலைமீது உகந்த - ஊதிமலைமேல் உள்ளம் உவந்து வாழுகின்ற, பெருமாளே - பெருமையின் மிக்கவரே! ஆதரவது ஆய் வருந்தி - அன்புடன் பதியாகிய தேவரீரை யடையவேண்டுமென்று வருந்தி, ஆதி அருணேசர் என்று - முழுமுதலாகிய செம்

பொருட்டலைவர் என்று துதித்து, ஆளும் உனையே வணங்க - ஆட்கொள்கின்ற தேவரீரை வணங்கியுய்ய, அருள்வாயே - திருவருள் புரிவீர்,

## பொழிப்புரை.

முதன்மை பெற்ற பெரிய மாயையாக விளங்குபவரும், அம்பிகையும், ஒளியை யுடையவரும், சிவபெருமான் மகிழ்ந்த ஆவுடையாள் என்ற பீடஸ்தானமாக இலங்குபவருமாகிய உமாதேவியாருடைய திருக்குமாரரே! ஐந்து பூதங்களின் மாறுபாட்டால் உண்டாகிய உடம்புடன் அலைந்து, அறிவு நிறைந்த சிவாகமங்களை அறிந்து கொள்ளாமல், ஆபரணங்களைப் பூண்டுள்ள தனபாரங்களை யுடைய பெண்களுடைய ஆசையையே நாளும் நினைந்து அவர்களுடன் போகமுற விரும்புகின்ற அடியேனை ஆட்கொள்வதற்காக திருவுள்ளமிரங்கி அன்புடன் அருள் புரிந்து சைவநீதியும் சன்மார்க்கமும் விளங்குமாறு உபதேசித்த தன்மையானது, சிவபெருமானுடைய திருச்செவியில் உபதேசித்தருளிய மறைமுதன் மொழியாகிய மௌன மொழியேயாம்; அங்ஙனம் அடிமையேனுக்கு அருள்புரிய நீல நிறமுடைய மயில்வாகனத்தில் ஏறிவந்தருளிய கூர்மைபொருந்திய வேலாயுதக் கடவுளே! ஓதப்பெறுகின்ற வேதங்களும் ஆகமங்களும் கூறுகின்ற சிவயோகத்தைச் செய்து உகாந்த காலத்தையும் உணர்கின்ற தன்மையுடைய பெரியோர்களது வினை திருமாறு அவர்களுடைய ஊனும் உயிருமாகி வளர்ந்து பிரமநாதத்துடன் பேரின்ப வாழ்வு தந்தருளி ஊதிமலை என்னுந் திருமலைமீது எழுந்தருளிய பெருமிதமுடையவரே! அடியேன் மிக்க அன்புடன் தேவரீரை யடைய வேண்டுமென்று வருந்தி "முழுமுதலாகிய செம்பொருட்டலைவரே" என்று துதித்து ஆளுடைய உம்மையே வணங்கியுய்யத் திருவருள்புரிவீர்.

## விரிவுரை.

**ஆதிமகமாயி:—**

உலகத்தோற்றத்திற்கும் உயிர்கள் உய்தற்கும் அம்பிகையே முதன்மை பெற்றவராதலாலும், மாயையின் முதல்வியாதலாலும் "ஆதிமகமாயி" என்றனர்.

**உனையேவணங்க அருள்வாயே:—**

முருகவேளையன்றி மறந்தும் புறந்தொழாத உறுதியை சுவாமிகள் வற்புறுத்துகின்றார்கள்.

"உன்னை யொழிய ஒருவரையு நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்"
—நக்கீரர்.

"கற்றா மனமெனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வங் கனவிலு நினையாது"
—மணிவாசகர்

"தேவரே முதலுலகங்கள் யாவையுஞ் சிருட்டியாதிய செய்யும்
மூவரே எதிர்வருகினு மதித்திடேன்"
—இராமலிங்க அடிகள்.

**பூதமதா னவைந்து பேதமிட வேயலைந்து:—**

தேவலோகத்துள்ள உடம்பு பூதசாரதநு; நரகலோகத்துள்ள உடம்பு பூததநு, மண்ணுலகத்துள்ள உடம்பு பூதபரிணமதநு. மண் புனல் தீ காற்று வெளி என்ற ஐம்பூதங்களின் மாறுபாட்டால் உண்டாகிய உடம்பு.

"ஐந்துவித மாகின்ற பூதபேதத்தினு
லாகின்ற யாக்கை"
—தாயுமானர்.

**பூரண சிவாகமங்கள்:—**

எல்லாப் பொருள்களும் நிறைந்து ஞானவிளக்காய் விளங்குவது சிவாகமங்கள். ஆகமம் என்ற சொல்லுக்கு "வந்தது" என்பது பொருள். இறைவன் திருவாக்கினின்றும் வந்தது. காமிகம் முதலாக வாதுளாந்தமாக உள்ள சிறப்பு நூல்கள் யாவும் ஞானபாதமாம்,

உபதேசநேர்மை......வேதமந்த்ரம்:—

குமாரபரமேஸ்வரர் சிவபெருமானுடைய திருச்செவியில் உபதேசித்தருளிய உபதேசப் பொருளையே அருணகிரியாருக்கும் உபதேசித்தருளினார்.

"நாதா குமரா நமவென் றரனார்
ஓதாயென ஓதிய தெப்பொருள் தான்?"

"விசும்பின் புரத்ரய மெரித்த பெருமானும்
நிருப குருபர குமர என்றென்று பக்திகொடு
பரவ அருளிய மவுன மந்த்ரந்தனைப்பழைய
நினதுவழி யடிமையும் விளங்கும் படிக்கினிது
ணர்த்தி யருள்வாயே"

நீலமயில்:—

மயில் கழுத்து நீலநிறமுடையது.

"நீலக்ரீவ ரத்னக்கலாபமயிலே"

—மயில்விருத்தம்.

ஓதுமறை.........ஊழியுணர்வார்:—

சிவயோகம் புரியும் சிவஞானிகள் நிருவிகற்ப சமாதியில் ஊழி ஒருகணமாக அசைவற்றிருப்பர்.

ஊனுமுயிராய் வளர்ந்து:—

இறைவன் எங்கணும் அத்துவிதமாகக் கலந்திருக்கின்றனன்.

"ஊனுமுயிரு முழுதுங்கலந்தது"

—திருப்புகழ்.

## கருத்துரை.

பார்வதி தேவியின் பாலரே! அடியேனுக்கு உபதேசித்த அருட்சுடரே! ஊதிமலை மேவிய இறையவரே! தேவரீரையே வணங்க அருள்புரிவீர்.

---

ஊதிமலை என்னுந் திருத்தலம் கோயம்புத்தூர் ஜில்லாவில் உள்ளது.

ஓம் குஹாய நம:

# கந்தரலங்காரம்

(207-ம் பக்கத் தொடர்ச்சி)

(57) பொருபிடி யுங்களி றும்விளை யாடும் புனச்சிறுமான்
தருபிடி காவல சண்முக வாவெனச் சாற்றிநித்தம்
இருபிடி சோறுகொண் டிட்டுண் டிருவினை யோமிறந்தால்
ஒருபிடி சாம்பருங் காணாது மாய வுடம்பிதுவே.

## பதவுரை.

இருவினையோம் இறந்தால் - (ஓ மனமே!) நல்வினை தீவினையாகிய இருவினைகளையுடைய நாம் இறந்துவிட்டால், மாய உடம்பு இது - மாயாகாரியமாகிய உடம்பாகிய இது, ஒரு பிடி சாம்பரும் காணாது - ஒரு பிடியளவு சாம்பலும் ஆகாது ஒழியும்; (ஆதலால்) பொரு பிடியும் - போர் செய்தற்குரிய பெண் யானையும், களிறும் - ஆண்யானையும், விளையாடும் - கலந்து விளையாடுகின்ற, புனம் சிறு மான் - தினைப்புனத்தின் கண்ணுள்ள சிறிய மானானது, தரு பிடி - பெற்ற பெண்யானை போன்ற வள்ளி பிராட்டியாருக்கு, காவல - நாயகரே! சண்முகவா - ஆறு திருமுகங்களை யுடையவரே! என - என்று, சாற்றி - துதித்து, பிடி சோறு கொண்டு இட்டு உண்டு இரு - பிடியளவு சோறாவது அன்புகொண்டு யாசிக்கும் வறியவர்க்குக் கொடுத்து நீயும் சாப்பிட்டு இருப்பாயாக.

## பொழிப்புரை.

ஓ மனமே! புண்ணிய பாவங்களாகிய இருவினைகளையுடைய நாம் இறந்துபட்டால், மாயமாய் மறைந்து ஒழியும் உடம்பாகிய இது ஒரு பிடியளவு சாம்பலுங் காணாது அழியும்; ஆதலால், "போர்புரிதற்குரிய பெண்யானையும் ஆண்யானையும் கூடி விளையாடுகின்ற தினைப்புனத்தில் உள்ள சிறிய மான் பெற்ற வள்ளிநாயகியாருக்குக் கணவரே! ஆறுமுகத்தரசே!" என்று துதித்து, நாள்தோறும்

பிடிசோறு அளவாவது அன்புடன் வறியார்க்கு உதவி நீயும் சாப்பிட்டு இரு.

## விரிவுரை.

போருபிடியுங் களிறும் விளையாடும் புனம்:—

உலகம் முழுவதும் சத்தி சிவமாகக் காட்சி தருகின்றது; பெண்ணும் ஆணுமாகவே யாண்டுங் காணப்படுகின்றன; ஓரறிவுயிர்முதல் ஆறறிவுயிர்வரை யுள்ள எல்லா உயிர்களும் அவ்வண்ணமே ஆணும் பெண்ணுமாக அமைந்திருப்பது கண்கூடு. திருவோத்தூர் என்னுந் திருத்தலத்தில் திருஞான சம்பந்த சுவாமிகளால் ஆண்பனை பெண்பனையான அதிசயத்தை அறியாதார் யாவர்?

"பவமாய்த் தானது வாகும் பனைகாய்த்தே மணநாறும்
பழமாய்ப் பார்மிசை விழும்"

—திருப்புகழ்.

இனி அப்பரடிகள் திருக்கைலாய மலையை அவனருளே கண்ணாக் கொண்டு கண்டபோதும் கையிலயில் ஆண்யானையும் பெண்யானையுங் கூடி வருவனவாகக் கண்டு இன்புற்றதும் ஈண்டு நினைந்து மகிழற்பாலது.

மாதர் பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும்பாடிப்
போதொடு நீர்சுமந்தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்றபோது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர் திருப் பாதங்
கண்டறியாதன கண்டேன்.

சிறுமான் தருபிடி:—

நடையழகுபற்றி பெண்களை பெண்யானையாக உவமிப்பது மரபு. மான்பெற்ற யானை என்னும் அழகு சிந்தித்து மகிழ்தற்குரியது. மான் வயிற்றில் மான் பிறப்பது இயல்பு; யானை பிறந்தது என்கின்றார்; பிடி என்பது ஆகுபெயராக வள்ளியம்மையாரைக் குறிக்கின்றது.

சண்முகவா எனச்சாற்றி நித்தம்இரு:—

இரு என்றசொல்லை, சாற்றி நித்தம் இரு; பிடி சோறு கொண்டு இட்டுண்டு இரு; என இரண்டிடத்திலும் கூட்டிப் பொருள் கொள்ளுதல் சால இனிதாகக் காணகின்றது. தருமஞ் செய்யும்போது தற்போதமின்றி திருவருளைச் சிந்தித்து பயன்கருதாமல் இருக்கவேண்டுமென்பது இவ்வமுத மொழியால் விளங்குவது கவனிக்கத் தக்கது.

"வையிற் கதிர் வடிவேலோனை வாழ்த்தி வறிஞர்க்கென்றும்
நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின்கள்"

என்று சுவாமிகள் பிறிதோரிடத்தில் இங்ஙனமே வற்புறுத்திக் கூறுமாறு காண்க.

காரைக்காலம்மையாரும் இங்ஙனமே சிவனடியார்களுக்கு, நல்ல திருவமுதும், செம்பொன்னும், நவமணியும், செழுந்துகிலும் பிறவுந் தகுதிக்குத் தக்கவாறும் வேண்டுமளவுந் தரும்போதெல்லாம் சிவபெருமானைச் சிந்தித்தார்கள் என்னும் செய்தி எத்துணை இன்பத்தைத் தருகின்றது. அறிஞர்கள் ஆழ்ந்து நினைந்து அகமகிழ்க.

நம்பரடி யாரணைந்தால் நல்லதிரு வமுதளித்துச்
செம்பொன்னு நவமணியுஞ் செழுந்துகிலு முதலான
தம்பரிவி னலவர்க்குத் தகுதியின் வேண்டுவ கொடுத்தே
உம்பர்பிரான் திருவடிக்கே உணர்வுமிக ஒழுகுநாள்
—பெரியபுராணம்.

பிடிசோறு கொண்டிட்டுண்டிரு:—

பிறந்த நாள் தொட்டு தூராக்குழியாகிய வயிற்றை நிரப்பி நிரப்பி நொடிது அலைகின்றோம்; பயன் யாதுங் கண்டோமில்லை. ஆதலால் வறியவர்க்கு ஒரு பிடி சோறுவது அன்புடன் இட்டு உண்ணவேண்டும்.

"யாவர்க்குமாம் உண்ணும்போது ஒருகைப்பிடி"

என்றார் திருமூலர்.

"எமக்கென்னென் றிட்டுண்டிரும்"
—ஔவையார்.

ஏழைகள் வயிற்றில் விழும் ஒவ்வொரு சோறும் ஒவ்வொரு பொன்னாகத் தனக்கு மறுபிறப்பில் வந்து உதவும். இதுகுறித்தே, "எங்காயினும் வரும் ஏற்றவர்க் கிட்டது" என்ற திருமொழியுஞ் சித்தத்தில் இத்திக்க எழுந்தது.

இருவினையோம்:—

இருவினையோம் என்பதற்கு பெரியவினை யென்றும் பொருள் படும். "வினைப் போகமே யொருதேகங் கண்டாய்" என்றார் பட்டினத்தடிகள்.

ஒருபிடி சாம்பருங் காணாது மாயஉடம்பிதுவே:—

நான்குபேர் சுமக்கும் எண்சாணுடம்பாகிய இது முடிவில் பிடிசாம்பரும் ஆகாமல் அழிகின்றது. இதனைப் பேணுதற்கே அறுபது நாழிகையும் அவமே கழிகின்றது.

"ஓர்பிடி நீறு மிலாத உடம்பை
நம்பு மடியேனை இனியாளுமே" —பட்டினத்தடிகள்.

... ... ... ... "அரசாகி
இனிதிரு மாந்துவாழும் இருவினை நீண்டகாயம்
ஒருபிடி சாம்பலாகி விடலாமோ"
—திருப்புகழ்.

## கருத்துரை.

மனமே! இம் மாய உடம்பை விரும்பாமல், யாசிப்பவருக்குச் சிறிதேனும் கொடுத்து உண்டு, வள்ளிமணவாளனைத் துதித்து இனிது இருப்பாயாக.

---

### இளமையில் அறஞ் செய்தல்.

இன்சொல் விளைநிலமா, ஈதலே வித்தாக,
வன்சொல் களைகட்டு, வாய்மை எருவட்டி,
அன்புநீர்ப் பாய்ச்சி, அறக்கதிர் ஈன்றதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய். —அறநெறிச் சாரம்.

---

"தண்டாமல் ஈவது தாளாண்மை தண்டி
அடுத்தக்கால் ஈவது வண்மை—அடுத்தடுத்துப்
பின்சென்றால் ஈவது காற்கூலி." —ஔவையார்.

ஓம் குஹாய நம:

# கந்தர் திருவிளையாடல்

## "முருகனும் விஜயனும்"

தணிகைமணி, ராவ்பஹதூர், திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை, அவர்கள், M. A.

பாரதப்போர் விஜயனை (அருச்சுனனை) யாவரும் அறிவர். இந்த விஜயன் பாரதப்போர் விஜயன் அல்ல. இவன் கந்தபுராண விஜயன். சூரசம்ஹாரத்துக்காகச் சென்ற முருகபிரானுடன் போந்த இலக்கம் வீரர்களுள் ஒருவன். மஹா பக்தன். முருகக் கடவுளிடத்தில் ஆராத காதல் கொண்டவன்; திடபக்தி கொண்டவன். மஹா வீரன். ஆதலால், முருகக் கடவுளின் பக்தர்கள் யாவரும் இவனைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியது மிக அவசியமானது. சூரனுடன் நடந்த யுத்தத்தில் நிகழ்ந்த பின்வரும் நிகழ்ச்சியால் இந்த விஜயனது பக்தி எத்திறத்தது என்று நன்கு புலப்படும். இவன் சூரபத்மாவின் குமாரர்களான மூவாயிரவரொடு போர் செய்தான். தன் திறத்தையெல்லாம் காட்டியும் அவர்களை இவனால் வெல்ல முடியவில்லை. மூவாயிரவருள் ஒருவன் தலையை வீழ்த்தினால் வீழ்ந்த தலை உடனே முளைக்கின்றது, கையை அறுத்துத் தள்ளினால் அறுந்தகை உடனே கூடுகின்றது. என்ன செய்வான் விஜயன்? ஒரு நாளெல்லாம் போர் செய்தான். ஒன்றும் வென்றபாடில்லை. இம் மூவாயிரவரைக் கொல்லாது நமது தலைவன் சந்நிதானத்தில் செல்லேன் எனச் சபதம் இட்டான். அறுபட்ட அங்கங்கள் உடனே கூடுவதால் இவன்பாடு திடுக்கிட்டது. ஏதேது? இவர்கள் பெருவரத்தினர். ஆறுமாமுகப்பிரான் திருவருள் என்னுந் துணையின்றி இவர்களை வெல்லுவது அசாத்தியம் என்று உணர்ந்தான். முருகன் திருவடியை அங்ஙனே நின்று சிந்தித்து உள்ளம் உருகினன்.

"ஆறுமா முகப்பிரான் அன்றி யிவ்விடை
வேறொரு துணையிலை மெய்ம்மை யீதெனத்
தேறினன் அவனடி சிந்தை செய்தனன்
மாறிழி யருவி நீர் வழியுங் கண்ணினன்."

'உள்ளம் உருகில் உடனுவார்' என்பது வேதமொழி. யாதலால், பத்திவலையிற் படுவோனாகிய முருகவேள் அப் போர்க்களத்தில் விஜயன்முன் தோன்றி "அன்ப! இம் மூவாயிரவரும் பிரமனிடம் வரம் பெற்றவர்கள். இவர் களைத் தனித்தனியாய் நீ போரிட்டு வெல்வது என்பது முடியாத காரியம், மூவாயிரவரையும் ஏக காலத்தில் ஒரே படையால் வீழ்த்தவேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் இறப்பார்கள். அவ்வண்ணம் அவர்கள் வரம்பெற்றிருக் கிறார்கள். இந்தா! இது காலவயிரவப்படை; இதைக் கொண்டு நீ அவர்களைச் சங்காரஞ் செய்" எனக்கூறி அப்படையை விஜயனுக்குத் தந்து பிறர் கண்ணிற் புலப் படாது மறைந்தனர். விஜயனும் அப்படையைப் பூசித் துப் பிரயோகித்து அம் மூவாயிரவரையும் ஏககாலத்திற் கொன்றனன். இது கந்தபுராண வரலாறு. இந் நிகழ்ச்சியி னின்றும் இவ் விஜயன் சிறந்த முருகபக்தன் என்பதும், முருகன் 'அடியார்க்கு இரங்கும் வள்ளல்' என்பதும் தெளிவாக ஏற்படுகின்றன.

பகைவர் மூவாயிரவரை வெல்லும் சூழ்ச்சியை விஜய னுக்குச் சொன்ன முருகா! எனக்கு ஐவர் (ஐம்புலன்கள்) பகைவர் உள்ளனர். அவர்களை வெல்லும் சூழ்ச்சியை எனக்கு உணர்த்தி யருளவேண்டும் என்னுங் கருத்து பின் வரும் பாடலிற் காணலாகும்;

வரத்தினர் மூவா யிரவரை வெல்லும்
வழிதனை யறிந்திலேன் என்று
சிரத்தையோ டுன்னைத் தியானித்த விஜயன்
திகைப்பறத் தந்திரம் உரைத்தாய்
உரத்தினர் ஐவர் என்னிடை யிருந்தே
ஓர ஒட்டார் உன்னை அவரைத்
தரத்தினில் வெல்லும் தந்திரம் யாதோ
சாற்றுதி தணிகை நாயகனே!

[தணிகைநாயகன் மாலை (76)]

உ

முருகா.

MADRAS

# திருக்குறள்

(218-வது பக்கத் தொடர்ச்சி)

கம்பர் ஒருபெரிய கவிச்சக்கிரவர்த்தி; கவிதா சாமர்த்தியத்தில் மிகப் பிரசித்தி பெற்றவர் கம்பர். அவரைப் போல் அழகாகவும் இனிமையாகவும் பாடவல்லார் இல்லை. கம்பன் கவி உம்பர்நாட்டு அமிழ்தினும் இனியது. இது யாவரும் ஒப்பமுடிந்த உண்மை.

வள்ளுவர் அழுக்காறுமை என்ற அதிகாரத்தில்

கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்.

என்றார். ஒருவன் ஒருபொருளைப் பிறருக்குத் தருமமாகக் கொடுக்கும்பொழுது எவன் பொறாமைப் படுவானோ அவன் அழிவதுமின்றி அவனுடைய சுற்றத்தாரும் உண்ண உணவும் உடுக்க உடையுமின்றித் துன்புறுவர். என்பது மேற்கூறிய திருக்குறளின் பொருள்.

இந்த அருமைத் திருக்குறளை கவிநாயகராகிய கம்பர் தனது இராமாயணத்திலே இராமனுக்கு விஸ்வாமித்திரர் வாமனவதாரத்தைப் பற்றிக் கூறும்போது, எடுத்து இன்பம் பயக்க உரைக்கின்றனர். அவ்வருமைக் கவி வருமாறு,

எடுத் தொருவருக் கொருவ ரீவதினின் முன்னே
தடுப்பது நினக்கழகிதோ தகைவில் வெள்ளி
கொடுப்பது விலக்குகொடி யோயுனது சுற்றம்
உடுப்பதுவும் உண்பதுவும் இன்றி விடுகின்றாய்.

மெய்யன்பர்களே! கவியரசாகிய கம்பர் இப்படிப் பலஇடங்களிலும் திருக்குறளைப் பொன்போல் எடுத்து அமைத்து தனது இராமாயணத்தை அலங்கரிக்கின்றார் என்றால் திருக்குறளின் பெருமையை அளவிட வல்லார் யாவர்?

திருக்குறளைத் தொட்டாலும் கை மணக்கும்; படித்தால் கண் மணக்கும்; கேட்டால் செவி மணக்கும்; சொன்னால் வாய் மணக்கும்; எண்ணினால் இதயம் மணக்கும். அத்தகைய தெய்வமணம் வீசும் சீரும் சிறப்பும் உடையது திருக்குறள்.

சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து — முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள் வெண்பா.

என்றார் கவுணியனார் என்ற சங்கப்புலவர்.

திருக்குறள் பற்பல மொழிகளில் மொழிபெயர்த்து வேற்று மொழியினரும் பாராட்டிப் புகழ்வதே அதன் பெருமையையும் அருமையையும் நன்கு புலப்படுத்துகின்றது. வள்ளுவர் ஒருவருக்கே "தெய்வப்புலவர்" என்றுபெயர். அவர் சங்கப்புலவர் நாற்பத்தொன்பது பெருமக்களாலும் நன்கு மதிக்கப் பெற்றவர். தூயவாழ்வில் வாழ்ந்தவர். எல்லா வறமு முணர்ந்தவர். இத்தகைய செந்நாப்போதர் திருவாய்மலர்ந்தருளிய இப்பொதுமறையும் பொன்றாப்புகழை யுடையது. என்றும் இளமையானது. முப்பாலால் நாற்பொருள்களையும் நனி விளக்குவது. திருக்குறள் நம் செந்தமிழ்க்கே ஒரு பெரிய கௌரவத்தைக் கொடுத்துவிட்டது. திருக்குறள் என்னுந் திருவாபரணத்தால் தமிழ்த்தாயே மிகுந்த பொலிவுடன் விளங்குகின்றனள்.

அன்பர்களே! தமிழ் எழுத்துக்கள் அகரத்தில் தொடங்கி னகரமெய்யில் முடிவடைகின்றது. எல்லா எழுத்துக்களும் இதற்குள் அடங்கி விடுகின்றன. திருக்குறளும்,

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

என்று அகரத்தில் தொடங்குகின்றது.

ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின். —

என்று னகரமெய்யில் முடிவடைகின்றது. இவ்வாறு வேறு எந்த நூலும் அமையவில்லை. இத்தகைய பல சிறப்புக்களை யுடையது திருக்குறள்.

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப் பால் என்று முப்பாலாகப் பிரிந்துளது. இதில் முதலாவதாகிய அறத்துப்பால், இல்லறவியல் துறவறவியல் என்னும் இருபிரிவினை யுடையது. அவற்றுள் இல்லறவியல் பாயிரமுள்பட 24 அதிகாரங்களை யுடையது. துறவறவியல் விரதம் ஞானம் என்னும் இரு சிறு உட்பிரிவினையுடையது. விரதம் 9 அதிகாரங்களையும் ஞானம் 5 அதிகாரங்களையும் உடையது.

இனி இரண்டாவது பொருட்பால், அரசியல், அங்கவியல், ஒழிபியல் என்னும் மூன்றுபிரிவினை யுடையது. அவற்றுள், அரசியல் 25 அதிகாரங்களையும், அங்கவியல் 32 அதிகாரங்களையும், ஒழிபியல் 13 அதிகாரங்களையும் உடையன.

இனி மூன்றாவதாகிய இன்பத்துப்பால் களவியல், கற்பியல் என்னும் இரண்டு பிரிவினை யுடையது. அவற்றுள் களவியல் 7 அதிகாரங்களையும், கற்பியல் 18 அதிகாரங்களையும் உடையன.

ஆகவே பால் 3; இயல் 8; அதிகாரம் 133; பாடல் 1133. இவைகளை ஒருவன் நன்றாகப் படித்துவிட்டால் மீண்டும் ஒன்றையும் படிக்கவேண்டிய அவசியமில்லை. உலகம் போற்றும் உயர்நிலையில் விளங்கலாம்.

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின் —போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்.

ஆகவே அன்பர்களே! நம் தமிழ்நாட்டில் தமிழராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் தமிழ் மறையாகிய திருக்குறளை அவசியம் ஓதி யுணர்தல் வேண்டும்.

முருகா

# கற்பு.

அழகேசன் மனம் ஒருநாளும் கவலையென்பதையே யறிந்ததில்லை. எப்போதும் அவன் மனம் ஆனந்தக்கடலில் உல்லாசமாக நீந்திக் கொண்டிருந்தது. அதற்குக் காரணம் அவன் செய்த அருந்தவப் பயனால் வந்த அவனுடைய அருமை மனைவி மலைவளர் காதலியே; தன்னை மிக்க பாக்கியசாலி யென்று கருதி மகிழ்வான். தன் மனைவியின் இனிய குணத்தை நினைத்து உள்ளமும் உடம்பும் பூரிப்பான். மலைவளர் காதலி தன் கணவனுக்கு மாறாக அணுத்துணையும் ஒருபோதும் நடந்ததில்லை. மதுர மொழியாலும், கருணை விழியாலும், இணையற்ற எழிலாலும், ஏவாமுன் செய்யும் பணிவிடைத் தொழிலாலும் நாடோறும் தனது கணவனுக்கு மிக்க மகிழ்ச்சியை விளைவித்தாள். தாமரைக்கண்ணனுலகினும் பெறமுடியாத நல்லின்பத்தை அழகேசன் தன் கற்பிற் பொற்புடைய மனைவியிடம் பெற்று களிபேருவகை யுறுவானாயினன். அழகேசன் தன் காதற் கொழுந்தைக் காணுந்தொறும் புதியகாட்சியாகவே விளங்கியது. அவள் ஒவ்வொரு சொல்லினும் இனிய தேனமுதூற்று பெருகி அவன் செவிவழியே பாய்ந்து உவட்டாத இன்பத்தை நல்கியது.

அழகேசன் சென்னையில் அகௌண்டண்ட் ஜெனரல் ஆபீசில் 200 ரூபாய் சம்பளத்தில் அமர்ந்து வேலை பார்த்துவந்தான். திருவல்லிக்கேணி வீரராகவ முதலியார் தெருவில் அவன் தனது சொந்தமான அழகிய மாளிகையில் வாசஞ் செய்துவந்தான். மலைவளர்காதலிக்குத் தாய்வீடு விருத்தாசலம்; மலைவளர்காதலி வரவுக்கு மீறிய செலவு செய்யாது சீரும் செட்டுமாகக் குடும்பத்தை நடாத்தினள். அதனால் குடும்பம் கண்ணியமாகவும் புண்ணியமாகவும் விளங்கியது.

சென்னையில் அப்போது அடிக்கடி பகல் களவு நடப்பதும், ஆச்சரியமான சம்பவங்கள் நிகழ்வதுமாக இருந்தன. எத்துணையோ முயன்றும் அக்களவு புரிபவரைப் பிடிக்க முடியாமல் அதிகாரிகள் திகைத்துக் கொண்டிருந்தனர். கடைகளில் பார்த்துக் கொண்டிருக்கும்போதே விலையுயர்ந்த பொருள்கள் காணுமல் போய்விடும்,

ஒருநாள் இரவு மேல்மாடியில் அழகேசன் சாய்வு நாற்காலியில் சாய்ந்து செய்தித்தாள் படித்துக்கொண்டிருந்தான்; மலைவளர்காதலி பால் கொண்டுபோய் ஆற்றிக் கொடுத்தனள்;

மலைவளர்காதலி:— பிராணேசா! ஏன் முகம் வாட்டமாக இருக்கின்றது?

அழகேசன்:— பெண்ணே! ஆபீசில் அதிகவேலை. இது என்ன தொழில்? அடிமைத் தொழில்தானே? அடிமை வாழ்வு என்று தொலையுமோ? சுகமாக இருந்து மனதாரப் பெருமானை வழிபடவும், நிம்மதியாக ஜெபம் செய்யவும், விரும்பிய க்ஷேத்திரம் போகவும், ஆன்ரோர்களோடு பழகவும் ஆகிய சன்மார்க்கத்தில் ஈடுபடமுடியவில்லை. உடம்புக்கு சுதந்தரங் கிடைத்தாலன்றி உணர்ச்சிக்கு சுதந்தரங் கிடைக்காது. உணர்ச்சிக்கு சுதந்தரங் கிடைத்தவுடன் உயிருக்கு சுதந்தரங் கிடைக்கும்.

மலை:- அன்புக்கடலே! இந்த வேலையை விட்டுத் தொலைத்து விடுங்கள். நீங்கள் வீட்டிலேயே இருந்தால் உங்கள் பக்கலிலேயே நானும் இருந்து பதம் பெறுவேன். தங்களைப் பிரிந்திருக்கும் ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு யுகமாக எனக்கு மிக்க வருத்தத்தைத் தருகின்றது. தாங்கள் வீட்டிலேயே இருப்பீர்களா என்று சதா முருகனை வேண்டிக்கொண்டிருக்கின்றேன். அவர்தான் தங்கள் திருவுள்ளத்திலும் இருந்து இந்த எண்ணத்தை உண்டுபண்ணினார்போலும்.

அழ:- கண்ணே! என்னுடைய முயற்சியினாலும், உன்னுடைய ஆடம்பரமற்ற செவ்விய வாழ்வாலும், செவ்வேட் பரமன் திருவருளாலும் சேர்த்துவைத்த தொகை பதினாயிரம் ரூபாய் இம்பீரியல் பாங்கில் இருக்கின்றதல்லவா? அதனைக் கொண்டு நூறு ரூபாய் வாடகை வருகின்றாற்போல் ஒரு வீடு வாங்கிவிட்டால் அதைக்கொண்டு நாம் சுகவாழ்வாக வாழ்ந்து ஆன்மலாபத்திற்கு வழிதேடலாம், எனக்கு வர வர உலகவாழ்வில் வெறுப்புண்டாகின்றது. தெய்வ வழிபாட்டில் உள்ளம் பள்ளமடையிற் பாயும் நீர்போல் தாவிச் செல்கின்றது.

மலை:- நாதா! தங்கள் கருத்து சிறப்புடையதே. பாங்கியில் பணமிருந்தால் வட்டி குறைவுதானே; வீடு வாங்கிவிட்டால் நிரம்ப வாடகைவரும். அதைக்கொண்டு நாம் சன்மார்க்க நெறியில் பொழுது போக்கலாம். அப்படியே செய்யுங்கள்.

அழகேசன் கருத்தின்படி அவன் வீட்டிற்குப் பக்கத்திலேயே ஒருவீடு பத்தாயிரம் ரூபாய்க்கு விலைக்குவந்தது. அதைப் பேசி தான் வாங்குவதாக முடிவுசெய்தான். அன்று வெள்ளிக்கிழமை; சற்று முன்னதாகவே ஆபீசைவிட்டுப் புறப்பட்டு, நேரே இம்பீரியல் பாங்குக்குப்போய் ரூபாய் பதினாயிரத்தையும் பெற்றுக்கொண்டு டிராம் ஏறி வீட்டைநோக்கி வருவாராயினன். அவன் பாங்கியில் பணம் வாங்கும்போது சிறந்தகோட்டும் விசிறி மடிப்பும் கைக்கெடியாரமும் மூக்குக் கண்ணாடியுமுடைய ஒருவன் அழகேசனை நன்ருகக் கவனித்துக் கொண்டே இப்படியும் அப்படியுமாக ஏதோ காரியம் பார்ப்பவன்போலவும் தான் கவனிப்பதை அவன் உணராதிருக்குமாறுமாக இருந்தான்; அழகேசன் அவனைக் கண்டு ஏதோ மனதில் சற்று கலவரமுற்ருன். அம்மனிதன் அழகேசன் ஏறிய டிராம் வண்டியிலேயே ஏறி பின் சீட்டில் இருந்து அவனைக் கூர்மையாகவும் குறிப்பாகவும் பார்த்துக் கொண்டிருந்தான். அழகேசன் தான் இறங்கவேண்டிய இடத்தில் இறங்கி வீடுவாங்குகின்ற ஆலோசனையுடன் வீட்டிற்குச் சென்ருன். அந்த மனிதனும் அவனை யறியாமற்படிக்கே சற்று பின்தாங்கிப் போய் அழகேசன் வீட்டை யடையாளம் பண்ணிக்கொண்டு திரும்பினுன். அழகேசன் பணத்தை மனைவிக்குக் காட்டி பெட்டியில் வைத்தான்.

சிறிது நேரத்திற்குப்பின் ஒரு மனிதன் சிறந்த தோற்றத்துடன் அழகேசன் வீட்டிற்கு வந்தான். வந்தவன் அழகேசனைப் பார்த்து தான் ஒரு வைரவியாபாரி யென்றும் வைரத்தோடு வைரமோதிரம் வாங்கும் கருத்திருந்தால் நயமாகத் தருவதாகவும் கூறினுன். சில வைர நகைகளையுங் காட்டினுன். அழகேசன் மனதில் ஏதோ அவனைப் பற்றி நல்ல எண்ணம் உண்டாகவில்லை. தன் மனைவியிடம் உள்ளறையிற்போய் வைர நகைகளைக்காட்டி "பெண்ணே! யாரோ ஒரு பெரிய வைரவியாபாரி வந்திருக்கின்ருர். இதோபார் நகைகள்; உனக்கு ஏதாவது தேவையுண்டா?" என்று கேட்டான். மலைவளர்காதலி "அன்பரே! வைரம் எனக்கு ஏன்? வைரம் ஏற்படக்கூடாதென்றுதானே ஆன்ருேர்கள் கூறுகின்றனர். ஆடம்பர வாழ்க்கை அருவருக்கற்பாலது. எளியவாழ்க்கையிலேயே இன்ப ஊற்று சுரக்கின்றது. ஆதலால் வேண்டா" என்ருள். இதற்குள் வைரவியாபாரி போல் வந்த மனிதன் அந்த வீட்டினுடைய அமைப்பு, பெட்டி வைத்துள்ள இடம் ஆகியவற்றை ஊன்றிப்பார்த்துக்

கொண்டான். அழகேசன் அவனிடம்வந்து "இப்போது ஒன்றும் வேண்டியதாக இல்லை" என்ருன். அதேசமயம் அழகேசனுக்கு ஒரு தந்தி வந்தது. வந்தவன் "தந்தி எங்கிருந்து வந்தது?" என்று கேட்டான். அழகேசன், "விருத்தாசலத்திலிருந்து எனது மாமனூர் என்னை வரச்சொல்லி இருக்கின்ருர்" என்ருன். வந்தவன், "இன்றே போகவேண்டுமோ?" என்ருன். அழகேசன், "ஆம்" என்ருன். வந்த மனிதன், "ஐயா! நமஸ்காரம் போய்வருகின்றேன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டுப்போனுன். மலைவளர்காதலி அவன் பார்வையில் தூய்மை யில்லாததால் அவன்மீது ஐயுற்று அவனை வெறுப்பாகப் பார்த்தனள்.

அழகேசன் தன் மனைவியைப் பார்த்து "பெண்ணே! நின் தங்கைக்குக் கல்யாணம் செய்ய உனது பிதா நிச்சயிக்கின்ருராம். அது சம்பந்தமாகப் பேசுதற்கு என்னை வரச்சொல்லி தந்தி சொல்லி யிருக்கின்ருர்; நாளை சனி ஞாயிறு ஆதலால் நான் இன்றிரவு திருவனந்தபுரம் எக்ஸ்பிரசில் புறப்பட்டு விருத்தாசலம் போய் திங்கள் காலை இங்கு வந்து சேருவேன். வீட்டில் பணம் நிரம்ப இருக்கின்றது. ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். வேலைக்காரக் கிழவனை வீட்டில் படுத்துக்கொள்ளச் சொல்லுகிறேன்" என்ருன். பின்னர் குறிப்பிட்டபடியே அழகேசன் அன்றிரவு திருவனந்தபுரம் மெயிலில் புறப்பட்டுப் போயினுன். வேலைக்காரக் கிழவன் நடையில் படுத்துக்கொண்டான். மலைவளர் காதலி உள்ளே அறையில் படுத்துக் கொண்டாள்.

* * * * * * *

இரவு 10 மணி; மூலைக் கொத்தளத்தில் ஒருவீட்டில் மங்கலாக விளக்கெரிந்துகொண்டிருந்தது. நாற்காலியில் ஒருவன் கெம்பீரமாக இருந்தான்; அவன்எதிரில் நான்குபேர் கைகட்டி நின்றுகொண்டிருந்தார்கள்.

தலைவன்:– "ஏ! இந்திரஜித்தன்களா! இன்று ஒரு பெரிய வேட்டை யிருக்கின்றது. நாம் எத்தனையோ நாட்களாக இந்த சென்னப் பட்டினத்தில் ஏதேதோ களவு செய்கின்ரேம். ஒரு சூரப்புலிகளும் கண்டுபிடித்தபாடில்லை. ம்... நான் இன்று ஒரு துப்பு பிடித்துக்கொண்டு வந்துள்ளேன். திருவல்லிக்கேணி வீரராகவமுதலிதெருவில் ஒரு வீட்டில் இன்று பத்தாயிரம் ரூபாய் இருக்கின்றது. நான் பாங்கியில் வாங்கும்போது பார்த்து கூடவே போய் இடந்தெரிந்து

யைக்கொண்டு வந்தேன். பிறகு வைர வியாபாரிபோல்போய் பலவிஷயங்களைத் தெரிந்துகொண்டுவந்தேன். அந்த வீட்டுக்காரன் இன்று விருத்தாசலம் போய்விட்டான். ரயிலேறு கின்றதையும் பார்த்தேன். ஒரு கிழவன்தான் காவல்; நீங்கள் போய் புத்தியையும் யுத்தியையும் நன்றாக உபயோகப்படுத்தி ரூபாயைக் கொண்டுவந்துவிடுங்கள்" என்று வீட்டின் அடையாளம், பெட்டி யிருக்குமிடம், மற்றும்பல தந்திரங்களையுங் கூறி சாவிக்கொத்தையுங் கொடுத்தான்.

கள்வர்கள்:- எஜமான்! நீங்கள் எங்களுக்குத் தலைவராக இருக்கின்றபோது எங்கட்கு என்னகுறை? எத்தனையோ காரியங்களைப் பகலிலேயே சாதித்திருக்கின்றோம். இது என்ன பிரமாதம்? அப்படியே உத்தரவுப்படி முடித்துக்கொண்டு வந்துவிடுகின்றோம்.

தலைவன்:- ஜாக்கிரதையாகப் போய்வாருங்கள். அசட்டுத்தனமாகச் செய்து அகப்பட்டுக்கொள்ளாதீர்கள்.

இரவு 12 மணி. அக்கள்வர்கள் நால்வரும் அழகேசன் வீட்டிற்குவந்து காரியத்தை முடிக்க ஆலோசித்துக்கொண்டிருந்தனர். சிறிது நேரத்திற்குள் நடையிற் படுத்திருந்த கிழவன் சிறுநீரைக் கழிப்பதன் பொருட்டு கதவைத்திறந்துகொண்டு வெளியில் வந்தான். அவ்வளவில் நால்வரும் இதுவே சமயம் என்று அக்கிழவனைப் பிடித்து வாயில் துணியடைத்து கையுங் காலுங்கட்டி ஒருதுண்டினால் கண்ணையுங்கட்டி திண்ணையின் கீழுள்ள பாகத்தில் கிடத்திவிட்டு மெல்ல உள்ளே நுழைந்தனர். சத்தம்போடாமல் தலைவன் குறிப்பிட்ட அடையாளப்படி பெட்டியிருக்கின்ற அறைக்குள்போய் சாவிக்கொத்தை எடுத்து பெட்டியைத் திறக்க முயன்றனர். வேறு அறையில் படுத்திருந்த மலைவளர்காதலி விழித்துக்கொண்டாள். சிறந்த மதிநுட்பம் உடையவள் ஆதலினால் அறைக்குள் சிறியசத்தம் உண்டாவதைக் கேட்டு ஏதோ சூழ்ச்சி நடப்பதாக ஊகித்தாள். திக்குச்சிகிழித்து அவர்கள் பெட்டியைத் திறக்க முயல்வதை ஜன்னல் மூலமாகப் பார்த்துக்கொண்டாள். உடனே அவள் மனம் பதைபதைத்தது; உடல் வேர்த்துவிட்டது; உள்ளம் நடுங்கியது. கந்தவேளைக் கருத்திலிருத்தி "வேலுமயிலுந் துணை" என்றுகூறி மெல்ல எழுந்து காலடிசத்தம் வராமற்போய் தான் படுத்திருந்த அறையின் மாடத்திருந்த பெரிய பூட்டை எடுத்து பெட்டியும் கள்ளர்

களும் இருந்த அறையிடம்போய் "பளீர்" என்று கதவையிழுத்து வெளிப்பக்கம் தாளிட்டு பூட்டிவிட்டாள். உள்ளே கள்ளர்கள் சிக்கிக்கொண்டார்கள். பிறகு மலைவளர்காதலி வெளியே யாராவது வேறு கள்ளர்கள் இருப்பரோ என்று ஐயுற்று எச்சரிக்கையாக சுற்றும் முற்றும் பார்த்தாள். ஒருவருமில்லை; திண்ணையின்கீழ் ஒருவெள்ளை மூட்டையிருப்பதைக்கண்டு நிதானித்துப் பார்த்தாள். கிழவன் என்று தெரிந்துகொண்டு கட்டவிழ்த்து நிகழ்ந்ததைத் தெரிந்து முருகன் முழுமுதற்கருணை முன்னின்று துணைசெய்ததென்று நினைத்து, அருகேயுள்ள போலீஸ்ஸ்டேஷனுக்கு ஓடி தெரிவித்தாள். போலீஸ் அதிகாரிகள் வந்து அறைக்குள்ளிருந்த கள்ளர்களைக் கைதி செய்து கொண்டு போயினர்கள். மறுநாள் மலைவளர்காதலி கணவனுக்குத் தந்தி சொன்னாள். செய்தித் தாள்களிலும் இச்செய்தி வெளியாயிற்று. கள்ளர் தலைவன் கையை முறித்துக்கொண்டு, "முட்டாள்கள் அகப்பட்டுக் கொண்டார்கள். நம்மை எங்கே காட்டிக்கொடுத்து விடுகின்றார்களோ" என்று ஏங்கினன்.

தந்தி கிடைத்தவுடன் அழகேசன் மறுநாளே புறப்பட்டு வந்து நிகழ்ந்ததை மனைவிகூறக்கேட்டு அவளுடைய அதியற்புத சாமர்த்தியத்தை நினைத்து களிபேருவகையுற்றான். போலீஸில் அந்நாள்வரையும் எவ்வளவோ உதைத்தும் அடித்தும் தங்கள் தலைவனைப்பற்றிக் கூறினார்களில்லை. அவர்களைக் காவல்படுத்தி கேஸ் விசாரணை செய்துகொண்டிருந்தார்கள்.

அழகேசன்:— பெண்ணே! நின்செயல் ஆடவர்களாலும்கூட செயற்கரியது. நின்னால் பெருஞ்செல்வம் தப்பியது.

மலைவளர்காதலி:- நாதா! எல்லாம் முருகன் செயல்; அவர் கொடுத்த அறிவு. என்னால் ஒன்றும் நிகழவில்லை, தாங்கள் விருத்தாசலம்போன சங்கதி யாது?

அழ:— கண்ணே! நின் தங்கையை அரியலூரில் ஒரு தனவந்தன் வீட்டில் தருவதாகத் தீர்மானிக்கப்பட்டது. சம்மதங் கேட்பதற்காக உங்கள் பிதா என்னை வரவழைத்தார். நானும் சரியென்றேன். வருகின்ற 15-ம் நாள் முகூர்த்தம். எனக்கு அதிகலீவு கிடைக்காது; ஒருநாள் முன்னதாகத்தான் நான்வர முடியும். உன்னை ஒரு வாரத்திற்குமுன் அனுப்பி விடுவேன்.

மலை:— பிராணேசா! அப்படியே செய்யுங்கள்; முதலில் பணத்திற்கு ஒருவழி பண்ணுங்கள்.

மறுநாள வலக்கு வரங்க உத்தேசித்த வீட்டைப் பணங் கட்டிப் பத்திரமெழுதி ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. மறுநாள் அழகேசன் ஆபீசுக்குப் போனுன். மலேவளர்காதலி தனித்திருந்தாள். ஒரு வளையற்காரன் வந்தான். மலேவளர்காதலி தான் தங்கை கலியாணத்திற்குப் போக இருப்பதால் வளையல் அணிந்து கொள்ள விரும்பி அவனை அழைத்து நடையில் இருத்தி வளையல்களைக் காட்டச் சொன்னுள்.

வளையற்காரன்:— அம்மா! நல்ல புதுமாதிரியான வளையல்கள் இருக்கின்றன; பாருங்கள் என்று வளையல்போட கையைத் தொட்டவன் ரேகை பார்த்து, "ஒரு பெரிய ஆபத்து வந்து நீங்கியிருக்க வேண்டும்" என்றனன்.

மலேவளர்காதலி:— பெரியவரே! உங்களுக்கு ரேகை சாஸ்திரம் தெரியுமோ?

வளை:— அதிகமாக ஒன்றும் தெரியாது; கொஞ்சம் தெரியும். பேர் ராசியும் சொல்லுவேன். களவு பயம ஏற்பட்டிருக்கும்.

மலே:— ஐயா! ஆம். என் தங்கைக்குக் கல்யாணம். அவள் பெயர், அம்புஜம். 12-வது நாள் திருமணம். அவருடை பேர்ராசிக்குப் பலன் சொல்லும்.

வளை:— அம்மா! நல்ல பெரிய இடத்திலே வாழ்க்கைப்படும். செல்வாக்காக வாழும். தாங்கள் எப்போது புறப்படுகின்றீர்?

மலே:— ஐயா! எங்கள் வீட்டுக்காரருக்கு லீவு அதிகம் கிடைக்காது. நான் மட்டும் வெள்ளிக்கிழமை காலே போவதாக உத்தேசம். அவர் வியாழனன்று வருவார்.

"சரியம்மா" என்று வளையற்காரன் வளையலேப் போட்டு விட்டு ஏதோ புதையலே எடுத்தவன்போல மகிழ்ந்து போயினுன். அவன் தனது இருப்பிடமாகிய கொண்டித்தோப்புக்குப் போய், "இவளல்லவா நமது ஆட்களேப் பிடித்துக் கொடுத்தவள். இவளே ஒரு கை பார்க்கிறேன்" என்று தனக்குள் கருவிக் கொண்டான், பிறகு வளையற்காரனேப்போலச் சென்ற கள்ளர் தலேவன் வெள்ளியன்று அவள் புறப்படுவதை எதிர்பார்த்திருந்தான்.

அழகேசன், "மலேவளர்காதலியை வெள்ளியன்று காலே 7-30 மணி பாசஞ்சரில் ஏற்றி யனுப்புவதாகவும் விருத்தாசலத்தில் வந்து அழைத்துக் கொள்ளுமாறும்" மாமனுருக்குத் தகவல் கொடுத்தான். மனேவியுடன் அழகேசன் எழும்பூர் போய் காலே 7-30 ரயிலில் இரண்டாவது வகுப்பு பெண்கள் வண்டியில் ஏற்றினுன். முன்னமேயே அந்த வண்டியில் ஒரு பெண் யாரையோ

எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் குறிப்புடன் இருந்தனள். அழகேசன் அந்த பெட்டியில் மனைவியை ஏற்றினன். முன்னரேயே அதில் ஏறி இருந்த அம்மையைப் பார்த்து "அம்மா! எங்கே போகின்றீர்கள்?" என்று கேட்டான். அவள் "நான் திருச்சிக்குப் போகின்றேன்" என்றாள். அழகேசன் "நல்லது" இவள் விருத்தாசலம் போகின்றாள்; பார்த்துக் கொள்ளுங்கள்" என்றான். அவள் "ஆகா! அப்படியே!" என்று இனிமையாகக் கூறினாள்.

வண்டி புறப்பட்டு விட்டது. மலைவளர் காதலி கணவன் மறைகின்றவரை ஜன்னலில் பார்த்த வண்ணமாக இருந்தாள். அழகேசனும் கைக்குட்டையை யசைத்த வண்ணமாக நின்று, வண்டி வெகுதூரம் போனவுடன் தன் வீடுபோய் ஆபீசுக்குப் புறப்பட்டான்.

ரயிலில் மலைவளர்காதலி தனக்குமுன் ஏறி இருந்தவளைப் பார்த்தவுடன் இதற்குமுன் எங்கோ பார்த்ததாக நினைவுக்கு வந்தது. வெகுநேரம் யோசித்துப் பார்த்தாள்; ஒன்றும் ஞாபகத்துக்கு வரவில்லை. ரயில் செங்கற்பட்டு தாண்டியது. மலைவளர் காதலியின் உள்ளத்தில் வரவர ஏதோ கலவரம் ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. அவள் பார்வை ஏதோ பல கருத்துக்களடங்கியதாகத் தெரிந்தது.

மலைவளர்காதலி:— அம்மாவுக்கு எந்த ஊர்?

அவள்:— திருச்சிங்க.

மலை:— இங்கே எங்கு வந்து போகின்றீர்?

அவள்:— சொந்தக்காரர்கள் வீட்டிற்கு வந்து போகின்றேன். அம்மா விருத்தாசலம் போகவேணுமோ?

மலைவளர்காதலிக்கு பலத்த சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. அன்று வைரவியாபாரியாக் வந்தவன் குரலும் வளையல் வியாபாரியாக வந்தவன் குரலும் அவள் குரலும் ஒரே குரல் என்றும், மூவரும் ஒரே ஆள் என்றும், ஆகவே ஒரு பெரிய மோசக்காரன் பெண்ணுருவுடன் நடித்து ஏதோ பெரிய சூழ்ச்சியுடன் வந்திருக்கின்றான் என்றும் தனக்குள் ஒரு கணத்தில் ஆராய்ந்தறிந்துகொண்டாள். தான் அவனை யறிந்துகொண்டதாக வெளிப்படுத்தாமல் மிகவும் சாமர்த்தியமாக "அம்மாவுடைய கழுத்திலுள்ள செயின் எத்தனைப் பவுன்?" என்றாள்.

அவள்:— அம்மா! 12 பவுன். என்று கழற்றிக் காட்டினாள்.

மலை:— (வாங்கிப் பார்த்துவிட்டு) நன்றாக இருக்கின்றது. என் கழுத்திலுள்ளது 8 பவுன். நல்ல மாதிரியாகச் செய்ய வேண்டும். என்று கழற்றிக் காட்டிவிட்டு, வேறு ஏதேதோ விஷ

யங்களைப் பேசிக்கொண்டு, அந்த செயினை ஆள்காட்டி விரலில் மாட்டி சுழற்றுவதுபோல் பாவனை செய்து வெளியே விழுமாறு செய்தாள். "ஐயோ! செயின் தவறி வெளியே விழுந்து விட்டதே" என்று அலறி வண்டியை நிறுத்தும் சங்கிலியைப் பிடித்து இழுத்தாள். வண்டி நின்று விட்டது. கார்டு, ரயில்வே போலீஸ் முதலியவர்கள் அங்கு வந்தார்கள். "ஏன் வண்டியை நிறுத்தினீர்கள்' என்றார்கள்.

மலைவளர்காதலி:- ஐயா! செயின் விழுந்துவிட்டது; அதனை எடுங்கள். (ஓடி ஒருவன் செயினை எடுத்துவந்தான்.)

கார்டு:— என்னம்மா! கழுத்திலிருந்து செயின் எப்படி கீழே விழுந்தது?

மலை:— ஐயா! கையில் எடுத்து பார்த்துக்கொண்டிருந்தேன் தவறி விழுந்துவிட்டது. சாட்சி வேண்டுமாயின் இதோ என்னுடன் பிரயாணம் புரியும் இந்த ஐயாவைக் கேளுங்கள்.

கார்டு:— எந்த ஐயாவை?

மலை:— இதோ இருக்கின்றாரே அந்த ஐயாவை.

கார்டு: -ஐயாவா? என்னம்மா பைத்தியம்; அம்மாவல்லவா?

மலை:— இல்லைங்கோ: ஐயாதான் ஏதோ படுமோசம் செய்வதற்காக அம்மாவாக உருமாறி வந்திருக்கின்றார்கள்.

உடனே பெண்ணாக இருந்த கள்ளர் தலைவன் முகம் வெளுத்துவிட்டது. நடுநடுங்கினான். கார்டும் போலீஸும் அவனைப் போய் பிடித்தார்கள். உடனே அவன் ரிவால்வரை எடுத்துச் சுடுவதற்கு முயன்றான். அதற்குள் ஜனங்கள் போய் நாலாபக்கத்திலும் வளைத்துப் பிடித்துக் கொண்டார்கள். அவன் உடம்பு துவையலாகப் பிடித்து கசக்கி உதைபட்டது. "ஐயோ! ஐயோ!!" என்று அலறினான்.

சென்னைக்கு மறுவண்டியில் மலைவளர்காதலியும் திரும்பினாள். அவனை போலீஸ்ஸ்டேஷனில் விசாரிக்கப்பட்டது. மலைவளர்காதலி வைரவியாபாரிபோலவும், வளையற்காரனைப்போலவும் வந்து புலன் விசாரித்ததையும், களவுக்கு அவனே காரணமென்றும் தெளிவாகக் கூறினாள். அவனும் அடிமேல்அடி அடிக்க ஒப்புக்கொண்டான். கள்ளர் ஐவருக்குந் தகுந்த தண்டனை கிடைத்தது. இவற்றை யெல்லாம் அறிந்த போலீஸ் அதிகாரிகள் மலைவளர்காதலியின் வியக்கத்தக்க அறிவைப் பாராட்டிப் பலகாலும் புகழ்ந்தார்கள்.

அழகேசன் தன் மனைவியின் மயிர்க் கூச்சல் எடுக்கத்தக்க அறிவின் திறத்தை நினைந்து அகமிக மகிழ்ந்தான். பிறகு விருத்தாசலத்திற்கு இருவரும்போய் கல்யாணத்தைச் சிறப்புற நடாத்துவித்தனர். முருகனருளால் அழகேசனும் மலைவளர் காதலியும் அன்புக்கடலில் திளைத்துக்கொண்டு அறம்பலபுரிந்து அறுமுகப்பரமனை அநவரதமும் வழிபட்டு இன்புற்று வாழ்ந்தார்கள்.

## மகேசுர வடிவம்.

சிவபெருமானுக்குரிய வடிவங்கள் அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூன்றுமாம். சிவபெருமான் அருவத் திருமேனி யுடையபொழுது சிவன் எனவும், அருவுருவத் திருமேனி யுடையபொழுது சதாசிவன் எனவும், உருவத் திருமேனி யுடையபொழுது மகேசுரன் எனவும் பெயர் பெறுவர். ஆன்மாக்களாகிய நம்போலிகளுடைய உருவம் இருவினைக்கு ஈடாகத் தோல் எலும்பு முதலிய தாதுக்களால் உண்டாகிய உருவம்; சிவபெருமானுடைய உருவம், ஆன்மாக்கள் செய்யும் தியானம் பூசை முதலியவைகளின் பொருட்டுச் சிவசத்தியாகிய திருவருட் குணங்கள் இன்னது இன்னது இன்ன இன்ன அவயவம் என்று பாவிக்கப்படும உருவமாம்.

உருவருள் குணங்களோடு முணர்வரு ளுருவிற் றோன்றுங்
கருமமு மருள ரன்றன் கரசர ணாதி சாங்கந்
தருமரு ளுபாங்க மெல்லாந் தானரு ளனக்கொன் றின்றி
யருளுரு வுயிருக் கென்றே யாக்கின னசிந்த னன்றே.

—சிவஞானசித்தியார்.

மகேசுர வடிவங்கள் சந்திரசேகரர், உமாமகேசர், இடபாரூடர், சபாபதி, கல்யாணசுந்தரர், பிக்ஷாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, ஜலந்தராரி, மாதங்காரி, வீரபத்திரர், ஹரியர்த்தர், அர்த்தநாரீசுரர், கிராதர், கங்காளர், சண்டேசாநுக்கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதர், கஜமுகாநுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசீனர், தக்ஷிணாமூர்த்தி, லிங்கோற்பவர் என்னும் இருபத்தைந்துமாம். இந்தப் பஞ்சவிம்சதி (இருபத்தைந்து) விக்கிரகபேதங்களைச் சிறிது வேறுபடுத்திக் கூறுவதுமுண்டு. அது ஆகமபேதமெனக் கொள்க. [சைவசாஸ்திரபரிபாலனம்.]

அருள்வாய் (அவர்கள், சொரூப இலக்கணமாகிய சிறப்பு இயல்பு நிலையில் நின்னுடைய திருவடி யனு பூதி யடையும்படி) அருள்செய்கின்றாய். இவ்வாறு மக்கட்கு அவர்கள்மேல் வைத்த பேரருளால் அவர்கள் நினது திருவடி யனுபூதி யடைதற்கு வேண்டுவன நீ எப்பொழுதும் செய்துகொண்டிருத்தல் உனது இயல்பு என்பது குறிப்பெச்சம்.

(வி—ரை.)

குகனென்ற வடமொழிச்சொல் மக்களுடைய இருதய மாகிய உள்ளத்தில் இருக்கிறவனென்பதை உணர்த்து கின்றது. முருகன் மக்களுடைய உள்ளத்தில் வீற்றிருந்து கொண்டு அவர்கள் வீடுபேறு அடைதற்கு சாதனமாய் முதலாவது அவர்கள் ஒழுகவேண்டிய அறநெறியை உணர்த் திக் கொண்டும் பின் அருள்நெறியை உணர்த்திக்கொண்டும் பக்குவப்படுத்தி அவர்கள் முடிவில் தன்னுடைய திருவடி யனுபூதியை அடையும்படி செய்தலால் ஆசிரியர் முருகனை அதற்குப் பொருத்தமாயுள்ள குகனென் னும் பெயரால் விளித்துக் கூறினார். திருவள்ளுவர் இரண் டாவது குறளில் இறைவனை 'மலர்மிசை ஏகினான்' என்று கூறினார். திருஞானசம்பந்தர், "அகனமர்ந்த அன்பினரா யறுபகைச் செற்றைம்புலனு மடக்கி ஞானம், புகலுடை யோர் தம்முள்ளப் புண்டரீகத்துள்ளிருக்கும் புராணர்" என்று 1-32-6வது பாட்டில் இறைவனைப்பற்றிக் கூறுகின் றார். அண்டமாகிய உலகமும், பிண்டமாகிய மக்களுடலும், மண், நீர், தீ, வளி, வான் ஆகிய ஐம்பெரும் பூதங்களால் ஆக்கப்பட்டுள்ளன. 36 தத்துவங்களில் ஆன்ம தத்துவம் 24-ம், மண், நீர்களில் அடங்குவனவாயும், வித்தியா தத்து

வங்கள் ஏழும் தீயிலடங்குவனவாயும், சிவதத்துவம் ஐந்தும், வளி வானிகளி லடங்குவனவாயும் உள்ளன. இங்கே உருவமென்பது தூல உருவங்களாகிய மண்ணையும், நீரையும், அருவமென்பது சூக்கும உருவங்களாகிய வளியை யும், வானையுங் குறிக்கின்றன. இனம் பற்றி இங்கே கூறப் படாததும், இடையிலுள்ளதுமான, தீயாகிய தூலசூக்கும பூதமும் கூறப்பட்டிருக்கிறது.

முதலாவது வரியில் அண்டத்திலுள்ள ஐம்பெரும் பூதங் களையும் கூறினபிற்பாடு, இரண்டாவது வரியில், அவ் வைம் பெரும் பூதங்களுக்குக் காரணங்களாயுள்ள ஐந்து சூக்கும பூதங்களின் மிக்க தூலமாயிருக்கிற மண் பூதத்துக்குக் காரணமாயுள்ள நாற்றத்தையும், மிக்க சூக்குமமாயுள்ள வானபூதத்துக்குக் காரணமாயுள்ள, ஒளியாகிய சூக்கும பூதத்தையும், ஆசிரியர் கூறுகின்றார். சாதாரணமாய் வானு கிய தூலபூதத்துக்கு ஓசையாகிய சூக்குமபூதமே காரண மாகக் கூறப்படுகின்றது. ஒளியே ஓசையாக விருத்திப்பட்டு விளங்குவதால் ஆசிரியர் இங்கே ஓசைக்குப் பதிலாக சூக்கும ஒளியைக் கூறினார். சூக்கும வாக்கின் பிறப்பிட மாகிய நாததத்துவமே, ஒளியாயும் ஓசையாயும் விளங்கு கின்றது. இவற்றின் இடையிலுள்ளதாய் இரண்டாவது வரியிற் கூறப்படாத சுவை, ஒளி, ஊறு ஆகிய மூன்று சூக் கும பூதங்களும் இனம்பற்றிச் சேர்த்துக் கொள்ளப்படும். இந்தத் தீயிலுள்ள ஒளி, வானிலுள்ள சூக்கும ஒளிக்கு வேறாயுள்ள, தூலஒளி, மேலே கூறப்பட்ட ஐம்பெருந்தூல பூதங்களும், ஐம்பெருஞ் சூக்கும பூதங்களும் அவற்றின் காரணங்களாயும், குணங்களாயுமுள்ள, ஐம்பெருஞ் சூக்கும பூதங்களும், மக்களுக்குப் புறமாகிய உலகில் மோந்தும் சுவைத்தும், கண்டும், உயிர்த்தும், கேட்டும், நுகரும் ஐம் புலப் பொருள்களா யிருக்கின்றன. ஐம்பெருந்தூல பூதங்

களும், ஐம்பெருஞ் சூக்கும பூதங்களும் மக்களுக்கு போகப் பொருள்களா யிருத்தல்பற்றி, திருநாவுக்கரசடிகள் திருவாரூர்த் திருத்தாண்டகம், முறையே 2-வது பாட்டில் "ஐம்பெருமா பூதங்காள் ஒருவீர், வேண்டிற்றொருவீர், வேண்டீர் ஈண்டிவ்வவனி யெல்லாம், உம்பரமே, உம்வசமே, யாக்கவல்லீர்க்கில்லையே நுகர்போகம்" என்றும் ஷை 4-வது பாட்டில் "உன்னுருவிற் சுவையொளி யூறோசை நாற்றத் துறுப்பினது குறிப்பாகுமைவீர் நுங்கள், மன்னுருவத் தியற்கைகளால் வைப்பீர்க்கையோ வையகமே போதாதே", என்றுங் கூறி யருளினமை காண்க.

இப் பூதப்பொருள்கள், அகமாகிய உடலினும் உள்ளன. மண்ணும், அதன் குணமும், நீரும் அதன் குணமும், முறையே பிரகிருதி மாயையினுள்ள, நிவிருத்திகலை, பிரதிட்டா கலையிலும், தீயும் அதன் குணமும் சுத்தமாயையினுள்ள வித்தியாகலையிலும், வளியும், அதன் குணமும், வானும் அதன் குணமும்; முறையே சுத்தமாயையினுள்ள சாந்திகலையினும், சாந்தியதீதகலையினுமுள்ளன. இங்ஙனம், ஐம்பெரும் பூதங்களும் அவற்றின் காரணமாகிய குணங்களும் (சூக்குமபூதம்) மக்களுடலாகிய அகத்திலும், புறமாகிய உலகிலும் இல்லாவிட்டால், மக்களுக்கு உலக போகம் நிகழாது, 1, 2 வரிகளில் ஆசிரியர் மக்கள் நுகரும் போகப்பொருளைக் கூறியபின் அப்போகம் நுகரும் இடமாகிய உடலை மூன்றுவதுவரியில் முதலினும், அப்போகத்தை நுகரும் உயிரை, உடம்புக்குப் பின்னும் கூறினார்.

முருகன் கருவாகிய் மக்களுடலில் விளங்குதலினாலே எனது என்ற புறப்பற்றும் உயிருக்கு உயிராய் விளங்குதலாலே யான் என்ற அகப்பற்றும் உண்டாகி அவ்விருவகைப் பற்றுக்களை ஏதுவாக உலகபோகம் நுகருகிறார்கள்; இவ்விருவகைப் பற்றுக்களும் போகநுகர்ச்சிக்கு ஏதுவாகிலி

பஞ்சக்கிலேசங்களுள் ளடங்கும். பஞ்சக்கிலேச மென்பது பற்றி முன் 17-வது பாட்டில் எழுதிய விளக்க உரையை ஓதி அறிக. விதியின் பயனாக கதிவருதலால் விதியாய்க் கதியாய் என மாற்றிப் பொருளுரைக்கப் பட்டது.

திருஞானசம்பந்த அடிகள் திருப்புகலிப் பதிகம் 1-வது பாட்டில் "விதியாய் விளைவாய் விளைவின் பயனாகி" இறைவன் விளங்குகின்றான் எனக் கூறி யிருத்தல் காண்க.

'விதி' யென்பது இங்கே அறச்செந்நெறி ஒழுக்கத்தைக் குறிக்கிறது. மக்கள் உள்நின்று முருகப்பெருமான் இயக்குதலும் அறிவித்தலுஞ் செய்வது அவர்கள் அறச் செந்நெறியிலொழுகி அவ்வொழுக்கத்தின் பலனாக முறையே இம்மையிலுளதாகிய உலக வின்பமும், மறுமையிலுளதாகிய துறக்க வின்பமும் மக்களுக்கு முறையே அவர்களது பொது இயல்பு நிலையில் உண்டாதலின் விதியாய்க் கதியாய் என்றார். கதி யென்பது பொதுஇயல்பு நிலையில் மக்கள் அடையும் உலக இன்பத்தையும், அதன் தொடர்பில் உண்டாகும் துறக்க இன்பத்தையுங் குறிக்கிறது.

இவ்வாறு மக்கள் தங்கள் பொது இயல்புநிலையில் அடையும் உலக இன்பத்தினாலும், துறக்க இன்பத்தினாலும் பல பிறவிகளிலுண்டாகும். அனுபவப் பயனாக துன்பத்தோடு கலந்திருக்கின்ற அவ்விருவகை இன்பங்களையும் நிலையில்லாதனவென்று உவர்த்து, நிலையுளதாகிய பேரின்பத்தில் நாட்டமுடையராய் அருட்செம்மைநெறியாகிய துறவற நெறிக்கட்சென்று மெய்த்தவஞ்செய்தலால் இருவினையொப்பு நேர்கின்றது. அங்ஙனம் இருவினையொப்பு நேர்கின்ற ஒருவரிடம் முன்னர் உள்நின்று அவரைப் பக்குவப் படுத்தும்படி உணர்த்திக்கொண்டிருந்த முருகப்பிரான் அவர்முன்னே நேராய் உபதேச குருவாய் வந்து அருணெறியை உணர்த்துதலினாலே, விதியாய்

கதியாய் என்றதற்குப் பின் குருவாய் வருவாய் என்று கூறினார். இவ்வுண்மையை திருமந்திரம் 1527 வது பாட்டில், "இருவினை நேரொப்பில் இன்னருட் சத்தி, குருவென வந்து குணம்பல நீக்கித் தருமெனுஞானத்தால்" எனக் கூறியருளினார். 'வருவாய்' என்ற முன்னிலை ஒருமைவினைமுற்று, வந்து என்னும் எச்சப்பொருளில் அருள்வாய் என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்தது. இப்பாட்டில் முன்மூன்று வரிகளிலும், ஆசிரியர் மக்களுடைய பொது இயல்புநிலையில் பக்குவமடைதற்கு முருகன் அவர்களோடு கலந்திருத்தலைக்கூறி நான்காவது வரியில் குருவாய் வருவாய் என்றதினாலே அவர்கள் அப்போது இயல்பு நிலையிலிருந்து சொரூபநிலை யடைதற்கு காரணங்கூறி அருள்வாய் என்றதனாலே அவர்கள் தங்கள் சிறப்பு இயல்பு நிலையில் முருகப்பிரானது திருவடியனுபூதி யடைதலைச் சுருக்கமாகக் கூறினார்.

குருவாய், வருவாய், அருள்வாய் என்றதனால், குருவாய் வந்து அருளுதல் முருகப்பிரான் மக்கள்மீது வைத்த பேரருள் காரணமாக, அவர்களிடத்துச்செய்யும் இயல்பு என்பது கூறப்பட்டது.

ஆகவே, இந்தப் பாட்டில் ஆசிரியர் மேலே கூறப்பட்டிருக்கிற, பல பாட்டுக்களிற்போல, மக்களை இல்லற நெறியில் ஒழுகுகின்றவரென்றும் துறவற நெறியில் தவம் செய்கின்றவரென்றும் பகுத்துரையாது மக்கள் எல்லோருக்கும் பொதுவாக அவர்களை உய்விக்கவேண்டி முருகப்பிரான் இருதய குகையினின்றுணர்த்தி பக்குவப்படுத்தி வருதலைக்கூறி முருகப்பிரான் செய்துவரும் அருட்செயலுக்கு இணங்க அவர்களும் தங்களுடைய பொது இயல்பு நிலையில் அறச்செந்நெறியில் ஒழுகி பக்குவமெய்தியும், பின்னர் அருட்செந்நெறியில் ஒழுகிப் பக்குவ

மெய்தியும், முருகனுடைய திருவடிகளை அடையவேண்டுமென்று அறிவுரை கூறுகின்றார். இதனாலே இந்நூலுக்கு இந்தப்பாட்டு கடைசியிலுள்ள பாட்டென்று நாம் யூகித்தறியலாம். சிலபிரதிகளில் இதன்பின் சேர்க்கப்பட்டிருக்கிற 50 பாட்டுக்களும், யாரோ பாடி இந்நூலிற் சேர்க்கப்பட்டனவென்று தெரிகிறது.

இந்தப்பாட்டின் முதல் மூன்று வரிகளில் கூறப்பட்டிருக்கிறபடி, மக்களுடைய பொதுஇயல்பு நிலையில் அவர்களைப் பக்குவப்படுத்த வேண்டி இறைவன் அவர்களோடு அத்துவிதமாய்க் கலந்திருத்தலை மாணிக்கவாசக அடிகள் திருச்சதகம் 15 வது பாட்டில் "வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க் கோனாகி யானெனதென்றவ ரவரைக் கூத்தாட்டுவானாகி" எனக்கூறியருளினர். இத்திருவாசகம் இப்பாட்டின் முதல் மூன்று வரிகளுக்கும் விளக்கவுரையாகவிருத்தல் காண்க.

கந்தரநுபூதி உரை முற்றுப் பெற்றது.



உயர்ந்த வேலைப்பாட்டுக்குக்காரண்டி
அசல் வெள்ளிசாமான்களும், வெள்ளி நகைகளும்
உத்திரவாதத்துடன் கிடைக்கும் இடம்.

**வ. ரு. புருஷோத்தம செட்டியார்**

தங்கம், வெள்ளி நகை வர்த்தகம்
(பூஜைக்குகந்த வெள்ளி உருவப் படங்களும் கிடைக்கும்)
நெ. 47, சைனாபஜார் ரோட்டு, சௌகார்பேட்டை, மதராஸ்.

---

**வெகு சரசம்! உத்திரவாதம்!!**

எங்கள் சொந்த தரியில் தயார் செய்யும்

**பட்டு-பாவாடை, ஜரிகை-ரவிக்கை,**
**பட்டு-சேலை தினுசுகள்**
**சாயத்திற்கும் ஜரிகைக்கும்**


உத்திரவாதத்துடன் கொடுக்கப்படும்.
வேண்டியவர்கள் உடனே ஆர்டர் செய்யவும்

**எஸ். ஆர். ஆதிநாராயண முதலியார்,**
**எஸ். எஸ். சம்பந்தமூர்த்தி முதலியார்.**

பட்டுஜவுளி வியாபாரம், திருக்கச்சிநம்பிதெரு, சின்னகாஞ்சிபுரம்.

---

நம்பிக்கைப்பெற்ற ஆயுர்வேத ஔஷதங்கள்.




ஸோல்ஏஜண்ட்ஸ் யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர்தெரு மதராஸ்.

தந்தி விலாசம் "சேமந்தகா" திருச்சி.



கிருஷ்ண பரமாத்மாவின் கிரீடத்தை அலங்கரிக்கச் செய்தது சேமந்தகமணி.

ஆனால்

இவ்வுலக மக்களின் அழகை அலங்கரிக்கச் செய்வது சேமந்தகா வைரங்கள்.

என்று

இதுவரையில் சேமந்தகா வைரங்களை வாங்கிப் பூரண திருப்தி அடைந்தவர்களால் போற்றப் படுகிறது.

இன்றுவரை வெளிவந்துள்ள வைரங்களில் தலை சிறந்தது.

எமது

**“சேமந்தகா வைரங்களே”**

உறுதியிலும் ஜொலிப்பிலும் அசல் வைரங்களைப் போன்றது.

ஒரு முறை பரிக்ஷித்துப்பாருங்கள்.

தோடு சைஸ் வைரம். பேசரி சைஸ் வைரம்.
1-க்கு 1—0—0. 1-க்கு 0—14—0.

கிடைக்குமிடம்:---

**மோதிரங்கய்ய செட்டியார் சன்**

நகை வியாபாரம், திருச்சி.

மற்ற ஊர்களில் எமது அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளிடம் மட்டும் கிடைக்கும்

ஏஜண்டுகள் தேவை.

Edited by Thirumuruga KIRUPANANDAVARI; Printed & Published by M. MADHUSOODANA SIVAM, at the THIRUPPUGAL AMIRTHAM PRESS, Kangayanellur, Via Katpadi. N. A.